செ.வெ.எண்: 05 நாள்: 03.09.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட மேல்நிலைப்பள்ளிகளில் கொரோனா நோய்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றி வகுப்புகள் நடைபெறுவதை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட மேல்நிலைப்பள்ளிகளில் கொரோனா நோய்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றி வகுப்புகள் நடைபெறுவதை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நாகப்பட்டினம் மாவட்டம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கீழ்வேளூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் அடிப்படை வசதிகள், கொரோனா நோய் தடுப்பு முன்னெச்சரிக்கைகளை பின்பற்றி வகுப்புகள் நடைபெறுவதை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்த பின் தெரிவித்ததாவது.

பள்ளிகளில் 9ஆம் வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சுழற்சி முறையில் வகுப்புகள் நடைபெறும். 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தினமும் வகுப்புகள் நடைபெறும். ஒவ்வொரு வகுப்பறைகளும் 20 மாணவர்கள் மட்டுமே சமூக இடைவெளியுடன் அமர வேண்டும். மாணவர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். வகுப்பிற்கு செல்வதற்கு முன் கைகளை கட்டாயமாக கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். மாணவர்களுக்கு நாள்தோறும் உடல் வெப்பநிலை பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. மதிய உணவினை மாணவர்கள் சமூக இடைவெளியுடன் அமர்ந்து உண்ண வேண்டும், மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரும் கோவிட்-19 தடுப்பூசி செலுத்தி கொள்ள மாணவர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கு சளி, காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் அருகில் உள்ள மருத்துவமனைக்கு தகவல் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் தலைமையாசிரியர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து கீழ்வேளூர் அரசினர் மாணவியர் விடுதியினையும், குருக்கத்தி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் ஆசிரியர் பயிற்சி தேர்வு மையத்தினையும், முஸ்லீம் தெருவில் வீடு வீடாகச் சென்று பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி போடும் பணிகளையும், கீழ்வேளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள ஆதார் சேவை மையம், பொது இ-சேவை மையம் மற்றும் அலுவலகத்தை ஆய்வு செய்தும், நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் அலுவலகத்தின் பதிவறையில் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருவதையும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வட்டாட்சியர் அலுவலக ஆய்வின் போது நாகப்பட்டினம் மற்றும் கீழ்வேளூர் வட்டாட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**